


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2023) சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டி சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, முனைவர் க.பொன்முடி, எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன், எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், கீதாஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீங்கா இடம் பிடித்த மாவீரன்

# அழகு முத்துக்கோன் புகழ் மங்காது ஒளிவீசிடும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை 12–

விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீங்கா இடம்பிடித்த மாவீரன் அழகுமுத்துக்கோனின் வாழ்வும் போராட்டமும் என்றும் புகழ் மங்காது ஒளிவீசிடும் என்று அவரது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டி பதிவிட்டுள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**தமிழ்நிலத்தின் தலைவணங்கா வீரத்துக்கும் தலைசான்ற தியாகத்துக்கும் தன்னிகரற்ற அடையாளமாக விளங்கும் மாவீரர் அழகு முத்துக்கோனின் பிறந்தநாள்.**



**ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தியாவின் பல பகுதிகளும் கிளர்ந்தெழுவதற்கு முன்பே அதைச் செய்து, விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீங்கா இடம்பிடித்த அழகு முத்துக்கோனின் வாழ்வும் போராட்டமும் என்றும் புகழ்மங்காது ஒளிவீசிடும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.7.2023) தலைமைச் செயலகத்தில், இந்திய கூடைப்பந்து சம்மேளத்தின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட ஆதவ் அர்ஜூன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




நேற்று (11.07.2023) புதுடெல்லி விஞ்ஞான் பவனில், ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்ற 50வது சரக்கு மற்றும் சேவை வரி (GST) கவுன்சில் கூட்டத்தில், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்துகொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயசந்திரன் மற்றும் வணிகவரித் துறை ஆணையர் தீரஜ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும்

# பயிற்சிப் பள்ளிகளில் சேர விரும்பும் மாணவர்கள் விண்ணப்பிக்கும் முறை!

## இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 12-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்பட்டு வரும் அர்ச்சகர் மற்றும் ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள், தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகள், பிரபந்த விண்ணப்பர் பயிற்சிப் பள்ளி மற்றும் வேத ஆகம பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உறைவிட வசதிகளுடன் கட்டணமில்லா பயிற்சியும், ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பள்ளிகளில் சேர விரும்பும் தகுதியுடைய மாணவர்கள் விண்ணப் பிக்கலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

திருக்கோயில்களில் சமூக நீதியை நிலைநாட்டவும், இறைவனுக்கு ஆற்றும் சேவையில் அனைவருக்கும் சம வாய்ப்பினை உறுதி செய்யும் வகையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்றிடும் வகையிலும், உரிய பயிற்சிகள் வழங்கிடவும் மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை, அருணாசலேசுவரர் திருக்கோயில், திருரங்கம், அரங்கநாத சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருப்பெரும்புதூர், ஆதிகேசவ பெருமாள் மற்றும் பாஷ்யகார சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்கள் சார்பில் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை, அருணாசலேசுவரர் திருக்கோயில், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில் சார்பில் ஓதுவார் பயிற்சிப் பள்ளிகளும், திருவில்லிப்புத்தூர், நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில் சார்பில் பிரபந்த விண்ணப்பர் பயிற்சி பள்ளியும், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் நாகநாதசுவாமி திருக்கோயில் சார்பில் தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகள் பகுதி நேரம் மற்றும் முழு நேர பயிற்சிப் பள்ளிகளும், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் மற்றும் திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் சார்பில் வேத ஆகம பாடசாலைகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, சீருடை, உறைவிட வசதிகளுடன் கட்டணமில்லாமல் பயிற்சியும், ஊக்கத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.3,000/ மற்றும் பகுதி நேரத்தில் பயிலும் மாணவர்களுக்கு மாத ஊக்கத் தொகை ரூ. 1500/ வழங்கப்படுகிறது.

அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் சேர வயது வரம்பு 13 முதல் 24 வயதிற்குள்ளும், ஓதுவார் பயிற்சிப் பள்ளியில் சேர வயது வரம்பு 13 முதல் 20 வயதிற்குள்ளும், தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளியில் சேர வயது வரம்பு 13 முதல் 16 வயதிற்குள்ளும் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வேத ஆகமப் பாடசாலையில் சேர வயது வரம்பு 12 முதல் 16 வயதிற்குள்ளும் மற்றும் பிரபந்த விண்ணப்பர் பயிற்சிப் பள்ளியில் சேர வயது வரம்பு 8 முதல் 18 வயதிற்குள் இருப்பதோடு 5 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இந்து மதத்தை சார்ந்தவராகவும், தமிழில் எழுத, படிக்க தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

மாணவர் சேர்க்கைக்கான படிவங்களை அந்தந்த திருக்கோயில்களின் அலுவலகத்தில் அலுவலக வேலை நேரத்தில் நேரிலோ அல்லது அந்தந்த திருக்கோயில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தோ பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு https://hrce.tn.gov.in என்ற துறையின் இணையதளம் மூலம் அறிந்துகொள்ளலாம். இப்பயிற்சிப் பள்ளிகளில் சேர ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### மணலி – திருவொற்றியூர் மண்டலங்களில்

# பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு பணிகள்!

## ஆணையாளர் ஜெ.இராதாகிருஷ்ணன் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, ஜூலை 12-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திருவொற்றியூர் மற்றும் மணலி மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், மியாவாக்கி அடர்வன காடு, சூரிய தகடுகள் (Solar panel), புதிதாக கட்டப்படவுள்ள பள்ளி கட்டிடங்கள் போன்ற பல்வேறு பணிகளை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன் நேற்று (11.07.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம், வார்டு20, மணலி மண்டல அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்தடுகளைப் பார்வையிட்டார்.

மேலும், மியாவாக்கி அடர்வனக் காட்டினை ஆய்வு மேற்கொண்டு அங்குள்ள இடத்தினை பசுமையாகவும், தூய்மையாகவும் பராமரிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வார்டு22, தேவராஜ் தெருவில் இயங்கி வரும் சென்னை உயர்நிலைப் பள்ளியில் கட்டப்படவுள்ள புதிய பள்ளிக் கட்டடத்தினையும், வார்டு21ல் பாடசாலை தெருவில் நடைபெறும் பள்ளி கட்டடப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அங்கு பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

மேலும், மணலி மண்டலம், வார்டு18ல் 200 அடி சாலையில் புதிதாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளை ஆய்வு மேற்கொண்டு பணிகளைத் தரமாகவும், பாதுகாப்புடனும், ஒருங்கிணைந்த துறை அலுவலர்களுடன் இணைந்து விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், மணலி மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, திருவொற்றியூர் மண்டலம், வார்டு 4க்குட்பட்ட பகுதியில் உள்ள மயான பூமியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மணலி எக்ஸ்பிரஸ் சாலை, ஜோதி நகர் மற்றும் சடயன்குப்பம் நெடுஞ்சாலையில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளை கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொடண்டார்.

இந்த ஆய்வின்போது, வடக்கு வட்டார துணை ஆணையர் எம்.சிவகுரு பிரபாகரன், மணலி மண்டலக் குழுத் தலைவர் ஏ.வி.ஆறுமுகம், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதிதாக அறிவித்துள்ள திருவள்ளூர் மேற்கு மாவட்டம் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். மாவட்ட அமைப்பாளர் ம.கிரண், துணை அமைப்பாளர்கள் தா.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, ம. புவனேஷ்குமார், ஆனழகன் டி.ஆர்.திலீபன் ஆகியோர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.வை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.





மதுரையில் கட்டப்பட்டுள்ள, கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை முதலமைச்சர் அவர்கள் ஜூலை 15–ஆம் தேதி திறந்து வைக்கவுள்ளார். இந்நிலையில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பி.மூர்த்தி ஆகியோர் நூலகத்தில் நடைபெறும் இறுதி கட்டப் பணிகளையும், ஆயுதப்படை வளாகத்தில் நடைபெறும் திறப்பு விழாவிற்கான அரங்கம் அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.